கழிவுநீரினை சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு செல்ல தடுப்புச் சுவரின் வெளிப்புறத்தில் கழிவுநீர் வடிகால் (Baby Canal) அமைத்தல், தேவையான இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், நடைபாதை அமைத்தல், கரையோர பூங்கா மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்தல், அணைக்கட்டு பகுதியினை மேம்படுத்துதல் மற்றும் நதியினை தூர்வாரி சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, வரும் காலத்தில் நொய்யல் ஆறு மாசடையாமல் இருப்பதற்கான பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) நெடுஞ்சாலைகளில் சாலை விபத்து பகுதிகளில் தானியங்கி புகைப்படக் கருவிகள் மற்றும் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் அதிகமாக சாலை விபத்துகள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து, அவ்விடங்களில் சோதனை அடிப்படையில், வாகனப் பதிவெண் பலகையினை படிக்கும் தானியங்கி புகைப்படக் கருவிகள் மற்றும் வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறைகள் 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சுற்றுச்சூழல் மற்றும் போக்குவரத்துத் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகம் முழுவதும் குளத்துப் பகுதிகளிலே, குளத்தையே ஆதாரமாக நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற குளத்துப் பாசன விவசாயிகள் அனைவருக்கும் குடிமராமத்து திட்டத்தைக் கொண்டு வந்து, இலவசமாக வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, பல்லாயிரம் கோடி ரூபாய் அரசு கஜானாவுக்கு பணத்தை மிச்சப்படுத்தியுள்ளார்கள். அதேபோல், விவசாயிகளுக்கும்